பக்கங்கள்: 08 | விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 23 புதன்கிழமை 06.05.2020 | கதிர் 50

## 774 பேர் பாதிப்பு

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பேர் இன்று அடையாளம் காணப்பட்டனர்.

ஏற்கனவே 771 பேர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 774 ஆக அதிகரித்துள்ளது.

# ஆபத்து இன்னும் நீங்கவேயில்லை

## முடக்க நிலை தளர்ந்தாலும் அவதானம் அவசியம் என்கிறது மருத்துவர் சங்கம்

**கொழும்பு, மே 06**

**இலங்கையில் தற்போது உள்ள முடக்க நிலை தளர்த்தப்பட்டாலும் கொரோனா அச்சுறுத்தல் நீங்கவில்லை. எனவே மிகுந்த அவதானமாக மக்கள் செயற்படவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**எதிர்வரும் 11 ஆம் திகதி தற்பொழுது நாட்டில் உள்ள முடக்க நிலையை விடுவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது .**

2

## பலாலியில் இருந்து நால்வர் வீடுகளுக்கு

யாழ்ப்பாணம், மே. 06

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த 4 பேரும் முழுமையான பரிசோதனைகளின் பின்னர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இன்று காலை வைத்தியசாலையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த முதலாம் திகதி அவர்களுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று

2

## உயிரிழந்தவருக்கு தொற்று; தொடர்ந்தும் விசாரணை

கொழும்பு, மே. 07

கொழும்பில் நேற்று உயிரிழந்த பெண்மணிக்கு கொரோனா வைரஸ் எவ்வாறு தொற்றியது என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லையென இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜென ரல் சவேந்திர சில்வா இன்று காலை தெரிவித்தார்.

2

## மீண்டும் ஊரடங்கு!

கொழும்பு, மே. 06

இன்று இரவு 8 மணி தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுலாகிறது

அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்ட 4 மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்கிறது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்ந்தது. 4 மாவட்டங்களில் ஊரடங்கு நீடிக்கும் நிலையில், 21 மாவட்டங்களிலும் இன்று இரவு 8 மணிக்கு மீள ஊரடங்கு அமுலாகும்.

அபாய வலயங்களான 4 மாவட்டங்களிலும் எதிர்வரும் 11ஆம் திகதி ஊரடங்கு தளர்த்தப்படாவிட்டாலும், இயல்பு வாழ்வை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் அன்றைய தினம் ஆரம்பிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, அடையாள அட்டையின் இறுதி இலக்கங்களின் அடிப்படையில் நடமாடும் நடைமுறை, எதிர்வரும் 11ஆம் திகதி முதலே ஆரம்பிக்கவுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள பிரதேசங்களில் மாத்திரமே இந்த நடைமுறை அமுலில் இருக்கும். ஏனைய பகுதிகளில் இந்த நடைமுறை அமுலில் இருக்காது.

## 60 பொலிஸாரிடம் பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, மே. 06

பேருவளை பகுதிகளில் கட மையில் ஈடுபட்ட 60 பொலிஸார் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பரிசோதனை முடிவில் எவருக்கும் தொற்று உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பேருவளை, சீனன்கொட்டுவ, பன்னில உள்ளிட்ட பகுதிகளில் கொரோனா தொற்றா ளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே 60 பொலிஸாரிடம் பி.சி.ஆர். பபரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் சலூன்களுக்கு சுகாதார நடைமுறைகள்

வடக்கு மாகாணத்தில் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குரிய அறிவுறுத்தல்களை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நீண்ட நாள்களளாக ஊரடங்கு மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டு இருந்து தளர்த்தப்பட உள்ளதால் பெருமளவானோர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை (சலூன்களை) அணுகவுள்ளனர். இது ஒரு ஆபத்தான நிலையாகும்.

கொரோனா தொற்று ஆபத்துக்களைத்

2

## திங்கள் முதல் ரயில் சேவை

கொழும்பு, மே. 06

கொழும்பு கோட்டையிலிருந்து அத்தியாவசிய சேவைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் எதிர்வரும் மே 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

2

## யாழ்ப்பாணத்தில் சமூகத்தொற்று ஏற்படாமல் நடைமுறை இறுக்கம்

யாழ்ப்பாணம், மே. 06

யாழ். மாவட்டத்தில் சமூகத்தொற்று ஏற்படாவண்ணம் சில நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தினருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் பொதுப் போக்குவரத்து மற்றும் வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருபவர்கள் எதிர்நோக்கும் பாஸ் நடைமுறை தொடர்பாக ஆராயும் கூட்டம் இன்று இடம்பெற்றது.

கூட்டத்தின் முடிவில் யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் சமூகத் தொற்று ஏற்படாத வண்ணம் சில நடைமுறைகளைப் பின்பற்ற உத்தேசித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எதிர்வரும் நாள்களில் 1,000 தொற்றாளர்கள்!

### சுஜீவ சேனசிங்க எச்சரிக்கை

கொழும்பு, மே. 06

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் ஆயிரம் பேர் வரையிலான கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்படலாம் எனச் சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்விடயத்தை வெளிப்படுத்தினார்.

2

## உயிரிழந்தவருக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -
கொரோனா வைரஸ் தொற்றி நேற்று உயிரிழந்த பெண்மணிக்கு அது எவ்வாறு, யாரால் தொற்றுக்குள்ளானது என்பது பற்றி இதுவரை தகவல் தெரியவரவில்லை. எப்படியாயினும் அதனை கண்டறிவோம். இன்றைய தினத்திற்குள் அது தொடர்பில் அறிவிப்பொன்றை வெளியிடுவோம்.

கொரோனா நோயாளர்கள் 771 பேரில் 348 பேர் கடற்படைச் சிப்பாய்கள். நேற்று அடையாளம் காணப்பட்ட 20 பேரில் 18 பேர் கடற்படைச் சிப்பாய்கள்.

லண்டனிலிருந்து இலங்கையர்கள் திருப்பி அழைக்கப்பட்டபோது அவர்கள் கொழும்பு விமான நிலையத்தில் குழப்பம் விளைவித்தார்கள் என்ற செய்திகள் தவறானவை. அப்படிஎந்த குழப்பங்களும் நடக்கவில்லை. - என்றார் இராணுவத்தளபதி.

## ஆபத்து இன்னும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், இவ்வாறு முடக்க நிலையைத் தளர்த்தினாலும் மிகுந்த அவதானம் அவசியமானது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

முடக்க நிலை தளர்த்தப்பட்ட பின்னர் ஏதேனும் ஓர் பகுதியில் வைரஸ் தொற்று பரவினால் உடனடியாக அந்தப் பகுதியை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் நீங்காத நிலையிலேயே அரசு நாட்டைத் திறக்கின்றது எனவும், இதனால் மிகுந்த அவதானத்துடன் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 1600 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன எனவும், இது நாள்தோறும் 2500 பரிசோதனைகளாக அதிகரிக்கப்பட வேண்டுமென்பதே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை சற்றே ஆரோக்கியமானது என்ற போதிலும் முடக்க நிலை தவிர்ப்பு அபாயத்தை உருவாக்கக்கூடிய நிலை உண்டு என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## எதிர்வரும் நாள்களில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -
கொரோனா வைரஸில் இருந்து நாட்டை பாதுகாப்பதற்காக அரசு முன்னெடுத்துவரும் செயற்பாடுகளில் இன்னும் வெற்றி கிடைக்கவில்லை. எதிர்வரும் தினங்களில் 1,000 பேர் வரையான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம் எனச் சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையில் தொடர்ந்தும் நாட்டை முடக்கி வைத்திருக்க முடியாது. நாடு வழமையான நிலைமைக்குத் திரும்ப வேண்டும்.

வைரஸ் தொற்றிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொடுப்போம். நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவிகள் இன்றி கொரோனா பரவலினால் ஏற்படும் நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்து கொள்ள முடியுமென்று ஜனாதிபதி எண்ணினால், மக்களும் இவ்வாறே கருதினால் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு நாங்கள் கோரிக்கை விடுக்கமாட்டோம். - என்றார்.

# மேபீல்ட் தோட்ட தொழிலாளர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில்



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மேபீல்ட் தோட்ட தொழிலாளர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழி மீறப்பட்டதாகவும், ஒரே தடவையில் கூடுதல் தொகை அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தே இந்த போராட்டம் மேபீல்ட் தோட்ட கொழுந்து மடுவத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இவர்களுக்கு சலுகை கடன் அடிப்படையில் சில உணவு பொருள்களை வழங்குவதற்கு தோட்ட கம்பனிகள் இணக்கம் தெரிவித்திருந்தன.

பெருந்தோட்ட மனித வள நிதியம் உட்பட இன்னும் சில தரப்புகளின் தலையீட்டுடன் மாதம் 3000 ரூபாய் பெறுமதியான உலர், உணவு பொருள்கள் வழங்கப்படும் என்றும், பின்னர் ஜூன், ஜூலை மாதத்திலிருந்து தவணை அடிப்படையில் அக்கொடுப்பனவு அறவிடப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

சலுகை கடன் அடிப்படையில் வழங்கப்படும் உலர் உணவு பொருள்களுக்கான கொடுப்பனவை ஜூன் மாதத்திற்கு பிறகே அறவிடப்படும் என தோட்ட நிர்வாகம் முன்னதாகக் கூறியிருந்தது.

இருந்தாலும் இம்மாதத்திலிருந்தே இக்கொடுப்பனவு அறவிடப்பட்டுள்ளது. இது பெரும் அநீதியாகும். 1650 ரூபாய்க்கு உலர், உணவு பொருள்கள் வழங்கிவிட்டு ஒரே தடவையில் அறவிடுவது மனிதநேயமற்ற செயல் என போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

அத்தோடு, கடந்த மாதத்தில் உரிய முறையில் தொழில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளமும் எடுத்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இத்தகைய சூழ் நிலையில் இக் கொடுப்பனவுக்கான கட்டணம் அறவிடப்பட்டுள்ளமையானது மனிதநேயமற்ற செயலாகும் எனத் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் மேபீல்ட் அதிகாரியிடம் தொடர்பு கொண்டு வினவிய போது -

கட்டணம் அறவிடுவது பற்றி கடந்த மாதம் 28 ஆம் திகதியே தோட்ட தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. திடீரென நேற்று வந்துதான் ஆட்சேபனை தெரிவிக்கின்றனர்.

அதேபோல் 3300 ரூபாய்க்கு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. ஆகவே 1650 ரூபாய்க்கு தான் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற குற்றசாட்டு ஏற்றுக் கொள்ள முடியாது.

இப்பகுதியில் உள்ள கஷ்டமான குடும்பங்களுக்கு இனிவரும் காலப்பகுதிகளிலும் நிவாரணங்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பலாலியில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து தத்தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## திங்கள் முதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரச மற்றும் தனியார் துறை அலுவலகப் பணியாளர்கள் கொழும்புக்கு வருகை தருவதற்கு வசதியாக இந்த ரயில் சேவைகள் இடம்பெறும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அம்புக்குறிகளால் அடையாளமிடப்பட்ட ஆசன ஒழுங்கில் மட்டுமே பயணம் செய்வோர் அமர அனுமதிக்கப்படுவர்.

ஆசன முற்பதிவுகளைத் திணைக்கள அல்லது நிறுவனத் தலைவர்கள் ஊடக மேற்கொள்ளுமாறு ரயில்வே திணைக்களம் கேட்டுள்ளது.

அதன்போது பயணத்தை மேற்கொள்ள உள்ளவரின் அலைபேசி இலக்கத்தை குறிப்பிடவேண்டும். அந்த இலக்கத்துக்கு வரும் குறுந்தகவலை (எஸ்.எம்.எஸ்) காண்பித்து ஆசனங்களில் அமர முடியும் என்றும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் பயணம் செய்பவர் ஒரு மீற்றர் சமூக இடைவெளியை பேணுவதையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் கோரப்பட்டுள்ளது.

### கொரோனாவுக்கு எதிரான போரில்

# மக்கள் ஒத்துழைப்பை கோருகிறார் கோட்டா



ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் நிர்வாக முறைமையினால் இயல்பு வாழ்க்கைக்குத் தடையேற்பட்டாலும் இந்தப் பயங்கரமான வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தை கடைபிடித்து உதவுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டு இந்த கோரிக்கையை விடுத்துள்ள ஜனாதிபதி, நாம் போராடுவது கண்ணுக்கு தெரியாத எதிரியுடன் எனவும் கூறியுள்ளார்.

இதனிடையே இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஹெலைய்னா டெப்லிஸ் நேற்று முற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயை ஒழிப்பது சம்பந்தமாக இதன் போது இரண்டு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

## வடக்கில் சலூன்களுக்கு சுகாதார ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தவிர்ப்பதற்காகப் பின்வரும் நடைமுறைகளை தங்களது சிகை அலங்கரிப்பு நிலையங்களில் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அறிவுறுத்தல்கள்:-

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இருவருக்கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்.

முடிதிருத்துநர்கள் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

முடிதிருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குரிய சேவையை நிறைவு செய்த பின் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரமிட்டுக் கழுவிய பின்பே அடுத்த வாடிக்கையாளருக்குரிய சேவையை வழங்க வேண்டும்.

மொத்தமாகப் பணியில் உள்ள முடிதிருத்துநர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரணமாக முடிதிருத்துநர்கள் இருவர் பணியில் இருந்தால் முடிவெட்டிக் கொண்டிருப்பவர்கள் இருவரும் காத்திருப்பவர் இருவரும் என நான்கு வாடிக்கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும்.

கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங்கள்.

ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவிக்கும் உபகரணங்கள் அனைத்தையும் ஸ்பிறிற் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்றுநீக்கம் செய்யவும். தொற்றுநீக்கம் செய்யமுடியாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

போர்வை, துவாய் மற்றும் பிளேட் போன்றவற்றை வழமைபோல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும். பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் அதனை உரிய முறையில் கழிவகற்றல் செய்யவும். துவாய்கள் மற்றும் போர்வைகளை தோய்த்து உலர்ந்த பின்பே பாவிக்கவும் - என்றுள்ளது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# முடக்கத்தைத் தளர்த்தும் முயற்சி

**இலங்கையைப் பொறுத்தவரை கொரோனா வைரஸ் தொடர்பான விவகாரத்தில் இலங்கை இன்று ஒரு முக்கிய சந்தியில் நிற்கின்றது.**

**எதிர்வரும் 11 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் முடக்க நிலையில் சற்றுத் தளர்வைக் காட்டுவது குறித்து அரசுத் தலைமை தீவிரமாகச் சிந்தித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.**

**11 ஆம் திகதி என்பது இலங்கையைப் பொறுத்தவரை மிக முக்கியமான நாள்தான். மார்ச் 11 ஆம் திகதிதான் இலங்கையில் முதல் கொரோனாத் தொற்றாளராக இலங் கைப் பிரஜை ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.**

**அதற்குப் பின்னர் இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.**

**ஆரம்பத்தில் நாடளாவிய ரீதியில் இரண்டு வார முடக் கம் என்ற செய்தி வெளியான போது மக்கள் அதை நம்ப வில்லை.**

**இப்போது முடக்க நிலை கொழும்பு உட்படப் பல மாவட்டங் களில் ஏறத்தாழ இரண்டு மாதங்களை எட்டப் போகின்றது.**

**சரியோ, பிழையோ முடக்க நிலையும், தொற்றுப் பரவல் ஏற்பட்ட பகுதிகளைத் தனிமைப்படுத்திப் பிரித்தமையும், ஊர டங்குமே இந்த நோய்ப் பரவல் வீச்சத்தை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து எல்லை மீறாமல் பார்த்தன என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மை .**

**இந்த நீண்ட முடக்கத்தினால் – ஊரடங்கினால் – நாடு பெரும் பின்னடைவுகளையும், பாதிப்புக்களையும் எதிர் கொண்டு நின்றாலும், தொற்றுப் பரவலை அதனால்தான் கட்டுப்படுத்த முடிந்தது என்ற வகையில் அந்த நடவடிக்கை மெச்சப்படுகின்றது.**

**ஆனால் நீண்ட நாள்களுக்கு அப்படி நாட்டையோ, பிர தேசத்தையோ தொடர்ந்து முடக்க நிலைக்குள் வைத்தி ருக்க முடியாது.**

**முடக்க நிலையை இழுத்தடிப்பது மேலும் பொருளாதார நெருக்குவாரங்களுக்கும் பின்னடைவுக்கும் வழி செய் யும் என்பதால் மாற்று வழிகள் குறித்து அதிகாரத் தரப்புச் சிந்திப்பதாகத் தெரிகின்றது.**

**எனினும், முடக்கத்தைத் தளர்த்தும் நடவடிக்கைக ளையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்து, சாதக, பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யும்படி கற்ற றிந்த வட்டாரங்கள் ஆட்சியாளரைக் கோருகின்றன.**

***“இலங்கையில் தற்போது நிலவும் முடக்க நிலை தளர்த் தப்பட்டாலும் மிகுந்த அவதானமாக மக்கள் செயற்பட வேண்டும்”*** **என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.**

***“நாட்டின் தற்போதைய நிலைமை சற்றே ஆரோக்கியமா னது என்ற போதிலும் முடக்க நிலைத் தவிர்ப்பு, இங்கு அபா யத்தை உருவாக்கக் கூடிய நிலை உண்டு என்பதை நினை வில் நிறுத்திக் கொள்ள வேண்டும்”*** **– என அரசாங்க மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் நளின் டீ சொய்ஸா வலியுறுத்தியுள்ளார்.**

**நாட்டைத் தொடர்ந்து இந்த நிலையில் முடக்கி வைத்தி ருக்க முடியாது எனக் கருதும் கோட்டாபய ராஜபக்ஷ, தொற் றைத் தவிர்ப்பதற்கான சமூக இடைவெளியைப் பேணி நாட்டை வழமை நிலைக்குக் கொண்டு வர முடியாதா என்று சிந்திக்கின்றார் போலத் தெரிகின்றது.**

**அபாய வலயங்களாகக் கருதப்பட்டவை கொழும்பு, களுத் துறை, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்கள். இங்கு ஊரடங்கு ஏழாவது வாரமாகத் தொடர்கின்றது. அதற்கு மத்தியிலும் இந்த நான்கு மாவட்டங்களிலும் கூட மே 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இயல்பு வாழ்க்கையையும் நிறுவனச் செயற்பாடுகளையும் வழமைக்குக் கொண்டு வருவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுத் தாம் நடத்திய உயர் மட்ட மாநாட்டில் ஆராய்ந்திருக்கின்றார்.**

**மாகாண ஆளுநர்கள், அமைச்சரவை அமைச்சுக ளின் செயலாளர்கள் போன்றோர் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியிருக்கின்றனர். அக்கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங் களின்படி நீண்ட முடக்கத்தின் பின்னர் நாட்டை வழமைக் குக் கொண்டு வரும் முயற்சி ஒன்றை கோட்டாபய அரசு இவ் வாரத்தில் முன்னெடுக்கவிருக்கின்றது.**

**சில சமயங்களில் இந்த முடிவு, விபரீதத்தை விலை கொடுத்து வாங்கிய விவகாரமாகி விடும்.**

**தகுந்த முன்னெச்சரிக்கையோடு மிக அவதானமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தளர்வு நடவடிக்கை இது. முழு நாடுமே இதில் அவதானமாக நடப்பது அவசியம்.**

# தேர்தலை நடத்துவதற்கு சுகாதார நடைமுறைகள்

கொழும்பு, மே. 06

2020 பொதுத் தேர்தலை நடத்துவதற் கான வழிகாட்டல் கையேடு அடுத்த வாரத் திற்குள் தயாராக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொடர்பான அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஜுன் 20 ஆம் தி கதி சுகாதார வழிகாட்டலுடன் பொதுத் தேர்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒட்டுமொத்த நாட்டின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய மேலதிக நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு மற்றும் சுகாதார மற் றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச் சின் அதிகாரிகள் கலந்துரையாடி வருகின் றனர்.

தேர்தல் பிரசாரத்திற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் ஊழியர்கள் மட்டுமல்லாமல், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களும் பின்பற்றக்கூடிய ஒரு சுகாதார வழிகாட்டுதலைத் தயாரிக்க ஆணைக்குழு சுகாதார அமைச்சு, தலைமை தொற்றுநோயி யல் நிபுணர்கள் மற்றும் சமூக மருத்துவர்க ளுடன் ஆலோசித்து வருவதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலை வெற்றிகரமாக நடத்த, அனைத்து மாவட்டங்களும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்றும் மேலும், நடை முறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளும் அகற்றப்பட்டு போக்குவரத்து சேவைகள் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் நடைபெறும்போது பிற அரச அதி காரிகளின் உதவிகளும் தங்களுக்கு தேவைப் படுகின்றது குறிப்பாக வாக்குச் சாவடிகளில் உதவுவதற்கும் பின்னர் வாக்குகளை எண்ணு வதற்கும் பலர் தேர்தல்கள் ஆணைக்குழு விற்கு உதவி புரிகின்றனர் என சமன் ஸ்ரீ ரத் நாயக்க கூறினார்.

எனவே தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு பெரிய குழுவினரை ஒருங்கிணைக்க வேண் டும், மேலும் பொலிஸ் அதிகாரிகளின் உதவி யும் தேவைப்படும்.இந்த வளங்கள் அனைத் தும் இருக்கும்போதே தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போதைக்கு, தேர்தல் நாள் ஜுன் 20 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது, ஆனால் சுகா தார அதிகாரிகளின் பரிந்துரைகள் மற்றும் கொரோனா வைரஸ் பரவலின் நிலை ஆகி யவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்து வதா அல்லது தள்ளிவைப்பதா என முடிவு செய்யப்படும் என்றும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டார்.

# பேக்கரிப் பொருள்களை விற்கும் ஓட்டோக்களுக்குப் பரிசோதனை





வவுனியா, மே. 06

வவுனியாவில் பேக்கரிப் பொருள் களை விற்பனை செய்யும் ஓட்டோக்க ளுக்கான விசேட பரிசோதனையும், விற்பனையாளர்களுக்கான விழிப்பு ணர்வு கருத்தரங்கும் இன்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

கொரோனா தொற்று பரவலை தடுக்கும் முகமாக வவுனியா சுகாதார பிரிவுனர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிநடத்த லின் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமை வாக மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.மேஜெயா மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான சிவரஞ்சன், கோல்டயன் உள்ளடங் கிய குழுவினரால் ஓட்டோக்கள் பரி சோதனை செய்யப்பட்டதோடு விழிப் புணர்வு கருத்தரங்கும் மேற்கொள்ளப் பட்டது.

இதன் போது பேக்கரிப் பொருள் களை கொண்டு செல்லும் ஓட்டோக்க ளின் தரம், பொருள்களை நுகர் வோருக்கு வழங்கும் முறை, கையுறை களின் தன்மை என்பனவு தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட்ட தோடு, ஆலோசனைகளும் வழங்கப் பட்டன.

ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படை யில் இருந்து கற்றுத்தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத் தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம். உங்களின் சுயவிபரக்கோவையினை **kalaikkathironline@gmail.com** எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவையுங்கள்.

**தொடர்புகளுக்கு: 076 443 8623**

**தகவல் - நிர்வாகி பசுமை ஊடகம்**

# கர்நாடகாவில் மது விற்பனை ஒரே நாளில் ரூ. 410 கோடி!




இந்தியா முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து கர்நாடகத்தில் 40 நாள்களுக்கு பிறகு திங்கட்கிழமை மதுபானக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் ரூ. 410 கோடிக்கு மதுபானம் விற்பனை ஆகியுள்ளது.

மாநிலம் முழுவதும் 4,200 கடைகள் திறக்கப்பட்டன. மதுப்பிரியர்கள் சமூக இடைவெளியைப் பேணியபடியே நீண்ட வரிசையில் காத்திருந்து மதுபானங்களை வாங்கிச் சென்றனர். ஆண்களுடன் போட்டி போடும் வகையில் பெண்களும் வரிசையில் காத்திருந்து மதுபானம் வாக்கினர். முதல் நாளில் மொத்தம் 3.90 லட்சம் லீற்றர் பியர் மற்றும் 8.50 லட்சம் லீற்றர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் ஆகியன விற்பனையாகின. இதன் மதிப்பு ரூ. 110 கோடி.

2ஆவது நாளான செவ்வாய்க்கிழமை மாநிலத்தில் மது விற்பனை முதல் நாளைவிட அதிகரித்தது. ரூ. 410 கோடிக்கு மதுபானம் விற்பனை ஆகியுள்ளது. இந்தியாவில் தயாரிக்கும் வெளிநாட்டு மதுபானம் 36.37 லட்சம் லீற்றர் மற்றும் 7.02 லட்சம் லீற்றர் பியர் ஆகியன விற்பனையாகியுள்ளன. கர்நாடகத்தில் 2 நாள்களில் ரூ.242 கோடிக்கு மதுபானம் விற்பனையாகியுள்ளது.

## நடிகை ரோஜா மீது வழக்கு!



ஊரடங்குவிதிமுறைகளைமீறியதாகத்தொடரப்பட்ட வழக்கில் நடிகை ரோஜா உள்ளிட்ட 5 சட்டசபை உறுப்பினர்கள் ஐவருக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. பொது இடங்களில் மக்கள் கூட்டமாக கூடுவதைத் தவிர்க்க வேண்டும், தனி மனித இடைவெளியை பின்பற்ற வேண்டும், மக்கள் முக கவசம் அணிய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஊரடங்கு உத்தரவை மீறுவோர் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆந்திர மாநிலத்தில் ஊரடங்கு விதிமுறைகளை மீறி ஆளுங்கட்சியான வை.எஸ்.ஆர். காங்கிரஸைச் சேர்ந்த 5 சட்டசபை உறுப்பினர்கள் மக்களை ஒன்று திரட்டி நிவாரணப் பொருள்கள் வழங்கியதாக உயர் நீதிமன்றில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

'நகரி சட்டசபை உறுப்பினரும் நடிகையுமான ரோஜா, சித்தூர் மாவட்டம் ஸ்ரீகாளகஸ்தி சட்ட சபை உறுப்பினர் மதுசூதன் ரெட்டி, பாலமனேரு சட்டசபை உறுப்பினர் கவுடா, நெல்லூர் மாவட்டம் சூலூர் பேட்டை சட்டசபை உறுப்பனர் சஞ்சீவையா, குண்டூர் மாவட்டம் சிலாகலூரிபேட்டை சட்டமன்ற உறுப்பினர் விடுதலை ரஜினி ஆகியோர் ஊரடங்கு விதிமுறையை மீறி பொது நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அவர்களுக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட வேண்டும்' என மனுதாரர் தனது மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு மீது காணொலி மூலமாக நேற்று விசாரணை நடைபெற்றது. அப்போது குற்றம்சாட்டப்பட்ட ரோஜா உள்ளிட்ட 5 பேருக்கும் நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## காஷ்மீர் முன்னாள் முதல்வரின் வீட்டுக் காவல் 3 மாதம் நீடிப்பு



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தியின் வீட்டுக் காவல் மேலும் 3 மாதத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு நிலை நீக்கப்பட்டு இரண்டு யூனியன் பிரதேசங்களாகக் கடந்த ஆண்டு ஓகஸ்டு மாதம் 5ஆம் திகதி பிரிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாமல் இருக்க அந்த மாநில முக்கிய தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

இதில் முன்னாள் முதல் மந்திரிகள் பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா மற்றும் மெகபூபா முக்தி ஆகியோர் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

இதற்கிடையே, காஷ்மீரின் மவுலானா ஆசாத் சாலையில் உள்ள கிளை சிறையில் காவலில் வைக்கப்பட்டு இருந்த மெகபூபா முப்தி, பேர்வியூ குப்கர் சாலையில் இருக்கும் அவருடைய அலுவலக இல்லத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார் .

மெகபூபா முப்தியின் வீட்டுக் காவல் நேற்றுடன் முடிவடையும் நிலையில், மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டு இருந்த பரூக் அப்துல்லா மற்றும் உமர் அப்துல்லா கடந்த மாதம் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தங்க இறக்குமதி 99 சதவீதம் சரிவு

இந்தியாவில் கொரோனாவைக் கட்டுப்படுத்த அனைத்து வியாபார நடவடிக்கைகள் உட்பட இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டதால் , ஏப்ரல் மாதத்தில் தங்கம் இறக்குமதி 99 சதவீதம் சரிவடைந்துள்ளது என்று சுங்கப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

உலக அளவில், தங்கம் இறக்குமதியில் இந்தியா முதலிடத்தில் இருந்து வருகிறது. சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 900 தொன் தங்கம் இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் தங்க கட்டிகள் மற்றும் கச்சா வைரங்கள் மதிப்புக் கூட்டப்பட்டு ஆபரணங்களாக மறுஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் துறையின் பங்கு 14 சதவீதமாக உள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 50 கிலோ தங்கம் மட் டுமே இறக்குமதி செய்யப்பட்டு உள்ளது.

சென்ற ஆண்டின் இதே மாதத்தில் அது 110 தொன்னாக இருந்தது. ஆக, இறக்குமதி 99 சதவீதம் குறைந்துள்ளது.

அந்த மாதத்தில் டொலர் மதிப்பில் தங்கம் இறக்குமதி 28 சதவீதம் சரிந்து (397 கோடி டொலரில் இருந்து) 284 கோடி டொலராக குறைந்து இருக்கிறது.

## 50,000ஐ எட்டுகின்றது இந்தியாவில் தொற்று

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 694 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கணிசமாக உயர்கிறது.

மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 ஆயிரத்து 391. இன்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மட்டும் 2 ஆயிரத்து 958 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 126 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 694 ஆக உயர்ந்துள்ளது. 14 ஆயிரத்து 182 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

தொற்று அதிகமுள்ள மாநிலங்களில் மகாராஷ்டிரா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அங்கு மொத்தம் 15 ஆயிரத்து 525 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 617 உயிரிழந்தனர்.

குஜராத்தில் 6 ஆயிரத்து 245 பேருக்கும், டெல்லியில் 5 ஆயிரத்து 104 பேருக்கும், தமிழகத்தில் 4 ஆயிரத்து 58 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 3 ஆயிரத்து 49 பேருக்கும், ராஜஸ்தானில் 3 ஆயிரத்து 158 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 2 ஆயிரத்து 880 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மதுமானத்திற்கு 70 சதவீதம் வரியை அதிகரித்தது இந்தியா



டெல்லி அரசு மதுபானங்களுக்கு 70 சதவீதம் வரி விதித்துள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்த நாட்டை முழு அளவில் முடக்கியதால் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பை ஈடுகட்ட இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கொரோனா நோய் தொற்றுக் காரணமாக நடைமுறைல் உள்ள ஊரடங்கில் சில தளர்வுகள் செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து பல மாநிலங்களில் திங்கட்கிழமை முதல் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டன.

40 நாட்களாக மது குடிக்காமல் தவித்த மதுபிரியர்கள் கடைகள் திறக்கப்பட்ட முதல் நாளில் பெரும்கூட்டமாக வந்து மதுப் புட்டிகளைப் பெட்டி பெட்டியாக வாங்கிச் சென்றனர்.

டெல்லியில் சில இடங்களில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காததால் பிரச்சினைகளும் ஏற்பட்டன. சில இடங்களில் பொலிஸார் தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர்.

இந்த நிலையில் டெல்லி அரசு நேற்று முதல் மதுபானங்களுக்கு 70 சதவீதம் வரி விதித்துள்ளது. அதாவது, மதுபானத்தின் அதிகபட்ச விலையில் இருந்து கூடுதலாக 70 சதவீதம் வசூலிக்கப்படும்.

தொடர் ஊரடங்கால் அரசுக்கு ஏற்பட்ட தொழில் பாதிப்பு மற்றும் வருமான இழப்பை ஈடுகட்ட இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

இதற்கிடையே, சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படாத இடங்களில் ஊரடங்கு தளர்வு நிறுத்தப்படும் என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எச்சரித்துள்ளார்.

# கொரோனாவை சீனா தோற்றுவித்ததற்கு ஆதாரம் எதையும் அமெரிக்கா தரவில்லை

## உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

கொரோனா வைரஸ், சீனாவில்தான் தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரம் எதையும் அமெரிக்கா இதுவரை தரவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் கூறி உள்ளது.

கொரோனா வைரஸ், உலக அளவில் 2 லட்சத்து 55ஆயிரத்துக்கும் அதிகமானோரை உயிரிழக்க வைத்துள்ளது. இந்த வைரஸ் சீனாவின் வுஹான் நகரில் உள்ள வைரஸ் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து தப்பியது என்று அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் சிலவும் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் விவகாரத்தில் சீனாவின் மக்கள் தொடர்பு அலுவலகம் போல உலக சுகாதார நிறுவனம் செயல்படுகிறது என்று கடந்த வெள்ளிக்கிழமையன்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோவும், கொரோனா வைரஸ் சீனாவில்தான் தோன்றியது. சீனா இந்த விவகாரத்தில் ஆரம்பத்தில் தகவல்களை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டி வருகிறார்.

இந்த நிலையில் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவா நகரில் உலக சுகாதார நிறுவனத்தின் நெருக்கடி கால தலைவர் மைக்கேல் ரேயான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கொரோனா வைரஸ், சீனாவின் வுகான் நகரில் தோன்றியது என்று கூறப்படுவது எங்கள் பார்வையில் ஊகத்தின் அடிப்படையில்தான், அது அப்படியே நீடிக்கிறது. கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி எந்த ஒரு குறிப்பிட்ட ஆதாரத்தையும் அமெரிக்க அரசு எங்களிடம் வழங்கவில்லை. அப்படி ஆதாரம் வழங்கினால் அதைப் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் விருப்பத்துடன் இருக்கிறோம். கொரோனா வைரஸ் இயற்கையானதுதான் என்பதற்கான ஆதாரங்களும், ஆலோசனைகளும் தான் எங்களுக்கு வந்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோவும் கொரோனா வைரஸ் உகான் வைராலஜி இன்ஸ்டிடியூட்டில் இருந்துதான் வந்திருக்கிறது என்று கூறுவதற்கான தரவுகள் அல்லது ஆதாரங்கள் இருந்தால், அதைப் பகிர்ந்து கொள்வதா, எப்போது பகிர்ந்து கொள்வது என்பதை அமெரிக்க அரசு தான் தீர்மானிக்க முடியும்.

அதே நேரத்தில் அப்படியெதுவும் இன்றி வெறுமனே, ஒரு முடிவுக்கு வருவது என்பது உலக சுகாதார நிறுவனத்துக்கு கடினமானது ஆகும்.

நாங்கள் சீன விஞ்ஞானிகளிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியும். ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள முடியும். நாம் ஒன்றாக இணைந்து பதில்களை பெற முடியும்.

ஆனால் இது தவறான செய்கையின் தீவிரமான விசாரணைக்கு உரியது என்று முன்னிறுத்தப்பட்டால் இதை கையாள்வது மிகக்கடினமானது. இது அறிவியல் விவகாரம் அல்ல. இது அரசியல் விவகாரம். அறிவியல் என்றால் அதற்கான விடையைக் காண முடியும்.

அந்தப் பதில்களின் தாக்கங்களை ஒரு கொள்கை மற்றும் அரசியல் கண்ணோட்டத்தில் கையாள முடியும்.- இவ்வாறு அவர் கூறினார்

# இத்தாலியை பின்தள்ளி பிரிட்டன் 2ஆவது இடத்திற்கு முன்னேற்றம்!



கொரோனா வைரஸ் பாதித்த ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளி பிரிட்டன் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

கொரோனா வைரஸ் உலக அளவில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான உயிர் களைக் காவு வாங்கி வரு கிறது. இந்த ஆட்கொல்லிக்கு எதிராக தடுப்பூசியோ, மருந்துகளோ இதுவரை கண்டு பிடிக்கப்படாததால், கொரோனாவின் கோரத்தாண்டவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

உலக அளவில் அமெரிக்காவை மிகவும் பாதித்துள்ள இந்த வைரஸ் மற்றொரு வல்லரசு நாடான இங்கிலாந்தையும் விட்டு வைக்கவில்லை. அங்கும் உயிரிழப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், கொரோனா பாதித்த ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியை பின்னுக்கு தள்ளி இங்கிலாந்து முதல் இடத்தை பிடித்துள்ளது.

இங்கிலாந்தில் கடந்த ஒரு வாரத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, ஐரோப்பாக் கண்டத்தில் கொரோனாவுக்கு அதிக மக்களைக் காவு கொடுத்த நாடுகளின் பட்டியலில், இத்தாலியை பின்னுக்கு தள்ளி முதல் இடத்தை பிடித்துள்ளது.

தேசிய புள்ளிவிவரங்களுக்கான அலுவலகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை 29 ஆயிரத்தை தாண்டியுள்ளது. உலகின் இரண்டாவது இடத்தில் பிரிட்டன் இப்போது உள்ளது என்று தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவில் உயிரிழப்பு 72 ஆயிரத்தைத் தாண்டியது

அமெரிக்காவில் கொரோனா தாக்கத்தால் நேற்று ஒரே நாளில் 2 ஆயிரத்து 333 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆயிரத்தை கடந்துள்ளது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கொரோனா வைரஸ் ஒரு மாதத்திற்கும் மேலாக அமெரிக்காவைப் புரட்டி எடுத்து வருகிறது. உலக அளவில் வைரஸால் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

தற்போதைய நிலவரப்படி அமெரிக்காவில் 12 லட்சத்து 37 ஆயிரத்து 633 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது.

அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று ஒரே நாளில் 2 ஆயிரத்து 333 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆயிரத்து 271 ஆக அதிகரித்துள்ளது.

# கொரோனாவுக்கான தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கு ரூ. 150 ஆயிரம் கோடி

## தருவதற்கு உலக நாடுகள் இணக்கம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கான மருந்து ஆராய்ச்சிக்கு உலக நாடுகள் ரூபாய் 150 ஆயிரம் கோடி (இந்திய நாணயப் பெறுமதி) வழங்கச் சம்மதித்துள்ளன.

இப்போதுவரை கொரோனாவுக்கு மருந்தோ, சிகிச்சையோகிடையாது. நெருக்கமான மருத்துவக் கண்காணிப்பு மட்டுமே இருக்கின்றது. தடுப்பூசி உருவாக்கும் முயற்சிகள் உலகமெங்கும் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த ஆண்டுக்குள் தடுப்பூசி சந்தைக்கு வந்து விடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் மருந்து ஆராய்ச்சிக்கு சர்வதேச அளவில் நிதி திரட்டுவதற்கான 40 நாடுகளின் தலைவர்கள் கூட்டம், ஐரோப்பிய கூட்டமைப்பின் சார்பில், பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரசல்ஸ் நகரில் திங்கட்கிழமை நடைபெற்றது.

காணொலி காட்சி வழியாக நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக உலக நாடுகள் 7.4 பில்லியன் யூரோ (சுமார் ரூ.150 ஆயிரம் கோடி) வழங்க முன் வந்துள்ளன.

இந்த முயற்சிக்கு ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் வரவேற்பு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில் கூறியதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கடந்து செல்வதற்கு வரலாற்றில் மிகப்பெரிய பொது சுகாதார முயற்சி தேவைப்படும். இது ஒன்றுடன் ஒன்று இணைந்த உலகம். நாம் அனைவரும் பாதுகாப்பாக இல்லாத வரையில், நம்மில் யாரும் பாதுகாப்பாக இருந்து விட முடியாது.

புதிய கருவிகள், கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு உலகிற்கு முழுமையாக உதவக்கூடும். இதை உலகளாவிய பொதுப்பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும். இது அனைவருக்கும் மலிவான விலையில் கிடைக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்று மெதுவாகப் பரவுவதற்கும், உயிர்கள் காப்பாற்றப்படுவதற்கும் பரந்து விரிந்த, ஒருங்கிணைந்த பொது சுகாதார நடவடிக்கைகள் மிக முக்கியம். இது போன்ற நடவடிக்கைகளை எதிர்த்துவரும் நாடுகள் கூட ஆபத்தில் இருக்கின்றன. இந்த கொரோனா வைரஸ் தொற்று, இன்னும் பல நாடுகளை தாக்குகிற ஆபத்து உள்ளது.

அதன் தாக்கத்தை குறைத்துக்கொள்ளும் சாத்தியம் உள்ளது.



கொரோனா வைரஸ் தொற்று உலகின் ஒவ்வொரு மூலையிலும் பரவி வருகிறது. 35 லட்சத்துக்கும் அதிகமானோரை இந்த கொடூர வைரஸ் தாக்கி இருக்கிறது. 2 லட்சத்து 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர்.

நம் அனைவருக்கும் பொதுவான ஒரு பார்வை தேவைப்படுகிறது. நாம் எங்கும் நம் மக்களையே முன்னிலைப்படுத்துவோம். - இவ்வாறு அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கத்தேவையான நிதி திரட்டும் இந்தக் கூட்டத்தில் உலகின் மிகப்பெரிய இரு பொருளாதார நாடுகளான அமெரிக்காவும், சீனாவும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச நிதியைச் செலவிடும் சட்ட அதிகாரம் நாடாளுமன்றால் மட்டுமே வழங்கப்படும்

## கோட்டாபயவுக்கு மங்கள பதிலடி



கொழும்பு, மே. 07

ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து எப்போதோ மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படும் வரை அரச நிதியைச் செலவிடுவதற்கான சட்டபூர்வ அதிகாரம் நாடாளுமன்றத்தால் மாத்திரமே வழங்கப்பட முடியும் என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திற்கு பதில் கடிதம் ஒன்றை எழுதியுள்ள அவர், அந்தத் திகதியில் இருந்து பொதுத்தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தை கூட்டும் நாள் வரை அரச செலவீனங்களை மேற்கொள்வதற்குள்ள அதிகாரங்களை நிரூபிக்குமாறும் அவர் சவால் விடுத்துள்ளார்.

அரசமைப்பின் 150/4 ஆவது சரத்தின் பிரகாரம் பொதுத்தேர்தலுக்கான செலவீனங்களுக்காக ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து நிதியை விடுவிக்கவும் செலவிடுவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதாக மங்கள சமரவீர ஜனாதிபதியின் செயலாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த நிலைமை தவிர்ந்த அரசமைப்பின் 150/3 ஆம் சரத்தின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக, அரச சேவைகளுக்காக ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து நிதியை பெறவோ செலவிடவோ உரிய அதிகாரம் வழங்கும் ஏற்பாடுகள் அரசமைப்பில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து எப்போதோ மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படும் வரை அரச நிதியைச் செலவிடுவதற்கான சட்டபூர்வ அதிகாரம் நாடாளுமன்றத்தால் மாத்திரமே வழங்கப்பட முடியும் என மங்கள சமரவீர ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தாலும் புதிய நாடாளுமன்றம் கூடும் திகதி இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும் அரசமைப்பின் 148 ஆவது சரத்திற்கு அமைய அரச நிதி தொடர்பிலான முழுமையான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளதாக மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.



புதிய நாடாளுமன்றம் கூடும் வரை அரச ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குவது உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கான நிதியை செலவிடுவதற்கான அனுமதியை பெற நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்றும் மங்கள சமரவீர ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir
ராஜகிரீடம் (முடி)
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி
நாளைய (07.05.2020) தலைப்பு
ராஜகிரீடம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பு, மே. 06

கொழும்பு – மாளிகாவத்தை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெத்தாராம விகாரை வீதியில் நேற்று செவ்வாய்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது 28,30 வயதுடைய நபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு சந்தேக நபரிடமிருந்து 7 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றைய சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது. மாளிகாவத்தை பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சிறிசபாரத்தினத்தின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிப்பு







வவுனியா, மே. 06

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று வவுனியாவில் இடம்பெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதரராதலிங்கம் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் படத்திற்கு மாலை அணிவித்து, தீபமேற்றி மலர்தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் வவுனியாத தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம், பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலா கோகுலகுமார் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழ் பெறும்வரை சலூன்களை திறக்க முடியாது

கொழும்பு, மே. 07

தற்காலிகமாக மூடப்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழைப் பெற்ற பின்னரே மீண்டும் திறக்கப்படவேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றும் போதுதான் அதற்கான சான்றிதழ் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்களை திறப்பதற்கு சுகாதார அமைச்சரால் வழங்கப்பட்ட அனுமதி தொடர்பில் சில ஊடக அறிக்கையி



டலால் நிலையங்களை நடத்துபவர்கள் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தெரிகிறது.

எனவே சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்களை ஏற்கனவே பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளுக்கு இணங்குவதால் மட்டும் மீண்டும் திறக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அழகு நிலையங்கள், சிகையலங்கார நிலையங்கள் மீண்டும் திறக்கப்படுவது குறித்த சுகாதார நடைமுறைகள் குறித்து தொடர் ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன. இதுதொடர்பில் விரைவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் சுகாதார நடைமுறைகள் வெளியிடப்படவுள்ளன.

அந்த நடைமுறைகள் அறிவிக்கப்பட்டது, அழகு நிலையங்கள் மற்றும் சிகையலங்கார நிலையங்களை இயக்குபவர்கள் நிறுவனம் அமைந்துள்ள பகுதியின் சுகாதார மருத்துவ அதிகாரியுடன் கலந்தாலோசித்து அவர்களின் சேவைகளை எளிதாக்குவதற்கான கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைய வசதி மற்றும் கட்டமைப்பு முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதும் அந்தப் பகுதிக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேரில் அவை முறையாக அமைக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பார்.

அவரது பரிந்துரையில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி சிகை அலங்கரிப்பு நிலையம் மற்றும் அழகு நிலையத்துக்கு திறப்பதற்கான அனுமதிச் சான்றிதழை வழங்குவார்.

அந்தச் சான்றிதழ் பெறப்படும் வரை நாட்டில் எந்தவொரு அழகு நிலையம் அல்லது சிகை அலங்கரிப்பு நிலையமும் மீண்டும் திறக்க முயற்சிக்கக்கூடாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

# பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு உடுவிலில் இராணுத்தால் வீடமைப்பு!









யாழ்ப்பாணம், மே. 07

**கணவனை இழந்த பெண்ணின் குடும்பத்துக்கு இராணுவத்தினரால் வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.**

**கொழும்பு ஆனந்தாக் கல்லூரி பழைய மாணவர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் இராணுவத்தினரால் இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.**

**சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டவுள்ள வீட்டுக்கான அடிக்கல்லை, யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி ரூவான்வணிகசூரிய இன்றுபுதன்கிழமை) நாட்டிவைத்தார்.**

**ஜே/182 உடுவில் தெற்கு, கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் பெண் ஒருவர் கணவனை இழந்த நிலையில் குடிசை வீட்டில் வசித்து வருகிறார். கிராம சேவையாளர் ஊடாக இந்தக் குடும்பம் தெரிவு செய்யப்பட்டு, புதிதாக வீடு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.**

# கடலில் மீன்கள் திருட்டு; பொலிஸில் முறைப்பாடு

மட்டக்களப்பு, மே. 06

ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களை கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாது என கல்முனை பொலிஸ் நிலையப் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜெமீல் முகம்மட் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர் சம்மேளனங்கள் ஆகியன இணைந்து சாய்ந்தமருதில் இன்று காலை நடத் திய மீன் திருட்டை ஒழிப்பது தொடர்பிலான சந்திப்பில் கலந்துகொண்டு மீனவர்கள் மத்தியில் பேசியவர்–

சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் இலகுவாக தப்பிவிட முடியாது. இலங்கைக் கடற்படை, விசேட அதிரடிப் படை, பொலிஸாரின் கூட்டு முயற்சியில் இந்தத் திருட்டு நடவடிக்கைகளை ஒழிக்க விசேட திட்டத்தைச் செயற்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தர உறுதியளிப்பதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், தேத்தாத்தீவு உட்பட அதை அண்டிய பிரதேசங்களிலேயே ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் திருட்டுப் போவதாகவும், மீனவர்கள் வலைவீசிவிட்டு வந்த பின்னர் 40 (மணிக்கு 40 கிலோமீற்றர்) குதிரை வேகம் கொண்ட சிறியரக மீன்பிடி படகுகளைக் கொண்டே இந்த திருட்டுச் சம்பவங்கள் நடாத்தப்பட்டு வருவதாகவும். மீன்களுடன் சேர்த்து மீன்பிடி வலைகளையும் வெட்டி எடுத்துச் செல்கின்றனர் எனவும் அங்கு மீனவர்கள் கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜெமீல் முகம்மட்டிடம் முறையிட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422



# மரக் குற்றிகள் கடத்தல் முயற்சி புலிபாய்ந்தகல்லில் முறியடிப்பு!

மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பிரதேசத்திலுள்ள காட்டில் சட்டவிரோதமாக வெட்டி கடத்துவதற்குத் தயாராகவிருந்த ஒரு தொகுதி தேக்கு மரக்குற்றிகளை வாழைச்சேனைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இங்கு சுமார் 12 அடி நீளமுடைய 23 மரக்குற்றிகள் காணப்பட்டன.

இம்மரக்குற்றிகள் உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டியில் ஏற்றப்பட்டிருந்தன என வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

இதுதொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. எனினும் உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டி உரிமையாளரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

நீண்ட நாள்களாக இப்பிரதேசத்தில் சட்டவிரோத மரக்கடத்தல் நடைபெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் பிரதம இன்ஸ்பெக்டர் ஜி. உதயகுமார் தலைமையிலான குழுவினர் இம்மரக்கடத்தலை முறியடித்துள்ளனர்.

# மீள சரக்கு விமான சேவைகளை ஆரம்பிக்கின்றது ‘சிறிலங்கன்’

மோசமாக பாதிப்படைந்துள்ள ஏற்றுமதி தொழில் துறையினருக்குக் கைகொடுக்கும் விதமாக ‘சிறிலங்கன்’ விமான நிறுவனம் வரும் 18 ஆம் திகதி முதல் வெளிநாடுகளுக்கான சரக்கு விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

முதற்கட்டமாக ஐரோப்பிய முக்கிய நகரங்களுக்கும், மத்திய கிழக்கு, இந்தியா மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கும் வாரந்தோறும் 27 விமான சேவைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவைகள் ஐரோப்பா, லண்டன் மற்றும் பிராங்போர்ட் நகரங்களுக்கும், சீனாவின் முக்கிய நகரங்களான பீஜிங், ஷங்காய் மற்றும் கன்தோன், மெல்போன் – ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், டோக்கியோ – ஜப்பான் போன்ற கிழக்காசிய நாடுகளிலும் மேற்கொள்ளப்படவிருப்பதாக சிறிலங்கன் விமான நிறுவன தலைவர் அசோக் பத்திரன தெரிவித்தார்.



இதன் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கு தமது பொருள்களை சர்வதேச சந்தையில் ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமல்லாது புதியவர்களுக்கும் தற்போதைய சூழ்நிலையில் சிறந்த சந்தர்ப்பமாக இது அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பேராசிரியர் சிவலிங்கராஜாவுக்கு நேற்று பவள விழா அகவை தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் பவளவிழா அகவைதினம் நேற்றாகும். அவரை கௌரவிக்கும் முகமாக அவரது அன்பர்கள் சிலர் அவரது வீட்டில் பேராசிரியரையும் அவர் துணைவி சரஸ்வதி சிவலிங்கராஜாவையும் வாழ்த்தினர்.

இதன்போது செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தம்பதியரைப் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார். கவிஞர் சோ. பத்மநாதன் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் உடனிருந்து வாழ்த்தினர்.



# வவுனியா நகர சபையில் இன்று கொரோனா தடுப்பு செயற்திட்டம்

கொரோனா வைரஸ் தாக்கம் அச்சம் காரணமாக வவுனியா நகரசபையில் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்ததையடுத்து நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் வவுனியா உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் ஊரடங்கு சட்டம் 15 மணிநேரம் தளர்த்தப்படும் சமயத்தில் வவுனியா நகரசபைக்கு சேவையைப் பெற்றுக் கொள்ள வரும் பொதுமக்கள், நகரசபை ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கதைக்கும் சமயத்தில் எச்சில் மற்றும் காற்றின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுக்கும் வகையில் வாடிக்கையாளருக்கும் ஊழியருக்குமிடையில் பொலித்தீன் மூலம் தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது.



# லண்டனில் இருந்து 194 பேர் திரும்பினர்

கொழும்பு, மே. 06

லண்டனில் சிக்கியிருந்த மேலும் 194 மாணவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் இன்று புதன்கிழமை அதிகாலை, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுடன் கனடா மற்றும் அமெரிக்காவில் இருந்து வருகை தந்த மற்றுமொரு இலங்கையர் குழுவினரும் லண்டனில் இருந்து பயணத்தை தொடர்ந்தனர்.

நாட்டை வந்தடைந்த மாணவர்கள் மற்றும் அவர்களது உடமைகள் விமான நிலையத்தில் வைத்து தொற்று நீக்கப்பட்ட பின்னர் படையினரால் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேலதிகமாக சிங்கப்பூரிலிருந்து 180 இலங்கையரை ஏற்றி வருவதற்காக யு.எல். 302 இலக்க விமானம் சிங்கப்பூரை நோக்கித் தனது பயணத்தை இன்று காலை ஆரம்பித்தது.

# வெசாக் தினத்தை முன்னிட்டு மூன்று முத்திரைகள் வெளியீடு

இவ் ஆண்டின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு, மூன்று நினைவு முத்திரைகள் இன்று வெளியிடப்பட்டன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அலரிமாளிகையில் இந்த முத்திரைகள் வெளியிடும் நிகழ்வானது இடம்பெற்றது.

அதன்படி தபால் திணைக்களம் 10, 15 மற்றும் 45 ரூபா பெறுமதியுடைய முத்திரைகளையே இவ்வாறு வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளையும் நாளை மறுதினம் ஆகிய இரு தினங்கள் வெசாக் பௌர்ணமி தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வெசாக் வாரமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# டெங்கு நுளம்பின் தாக்கம் மட்டு. மாவட்டத்தில் வீழ்ச்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பு தாக்கம் கடந்த கலங்களைவிட கனிசமாகக் குறைந்து வருகின்றது.

அந்தவகையில் கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி தொடக்கம் 2020 மே முதலாம் திகதி வரையும் 27 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் இதுவரை 14 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அது போன்று ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 04 பேர், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 04 பேர், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 02 பேர், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 2 பேர், வாகரை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் ஒருவருமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் வெல்லாவெளி, பட்டிப்பளை, கோரளைப்பற்று மத்தி, கிரான், வவுணதீவு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும் கடந்த சில வாரங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் எந்த ஒரு மரணங்களும் பதிவாகவில்லையென வைத்தியர் வே.குணராஜசேகரம் தெரிவித்தார். மொத்தமாக கடந்தவாரம் 27 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

வாழைச்சேனை பிரதேச மக்கள் சற்று விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கி கிடக்கின்ற குப்பைகள் நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக வைத்து கொள்ளுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு பொறுப்பான வைத்திய கலாநிதி வே.குணராஜசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2020 இல் வெளியிடப்பெற்றது.